**SAKTHI FOUNDATION - uni5 education**

**Language development - Tips for teachers - 0 - 6 years old children**

***ஆசிரியர்களுக்கு,***

தெளிவாக, அழகாக, ஏற்ற இறக்கத்துடன், நிதானமாக, உணர்ச்சிகூட்டி, மென்மையாகப் பேசுக.

கண்டிக்கும் போது கண்டிப்பு கலந்த பாஷையில் பேசுக.மனதைப் புண்படுத்தும் வார்த்தைகள் கூடாது.வன்முறை வார்த்தையாலோ செய்கையாலோ இருக்கவே கூடாது!!!

***"மாண்டிசொரி ஒரு போதும் தன் தாய்மொழியைத் தவிர வேறு மொழியில் பேசியதே இல்லை.அவர் பேசுவது இசை போல இருக்கும்"*** - தேவயானி அம்மையார் [மாண்டிசொரியின் மாணவி]

உரக்கப் பேசுவதைத் தவிர்க்கவும்.

யாரைக் கூப்பிட வேண்டுமானாலும் அவரை அடுத்தவர் மூலமோ, அவர் அருகில் சென்றோ அழைக்க வேண்டும்.

மிகவும் கொச்சையான மொழியை மாற்றிக் கொள்ளுதல் அவசியம்.

இரண்டு ஆசிரியர்கள் இருக்கும் சூழலில் ஒருவர் ஒரு மொழியிலும் அடுத்தவர் அடுத்த மொழியிலும் பேசுவது நன்று.

ஆசிரியரின் வாயை விட்டு வெளியேறும் ஒவ்வொரு சொல்லும் மிகவும் முக்கியம் ஆனது.அதனால் ஆசிரியர்கள் பேச்சில் மிகவும் கவனமும் எச்சரிக்கையும் விழிப்புணர்வும் கொள்ளுதல் தேவை.

நம் பேச்சைக் கொண்டு குழந்தைகளின் மூளையில் language chemistry நிகழ்கிறது.

தன் மொழிக்கு ஒவ்வாத சூழலில் குழந்தை பிறருடன் பழகாது.

**<u>உதாரணம்:</u>** கோவையைச் சேர்ந்த வளமான விவசாயக் குடும்பத்துக் குழந்தை.பண்ணைச் சூழலில் வளர்கிறது. ஊரின் தரமான மாண்டிசொரிப்

பள்ளியில் சேர்ந்தது.ஆசிரியர்கள் அக்குழந்தை எப்போதும் தனித்தே இருப்பதாகக் குறை கூறினர்.அவர்கள் அக்குழந்தையின் ஆங்கிலத் திறன் வளர வேண்டும் என்றனர்.அவர்களுக்கு உண்மை புரியவில்லை.பண்ணைச் சூழலில் வளரும் குழந்தைக்கு ஆங்கிலப் பரிட்சயம் உண்டாக வாய்ப்பில்லையே! அது மெதுவாகத் தானே ஆங்கிலத்தை க்ரஹிக்கும்? பள்ளியில் வகுப்பில் பிற பிள்ளைகள் ஆங்கிலம் மட்டுமே வீட்டில் பேசும் பிள்ளைகள்.

கோவையில் நம்ம வீடு பள்ளியில் ஒரு ஹிந்திக் குழந்தை சேர்ந்தது.ஒரு பருவம் வரை அக்குழந்தை யாருடனும் பழகவில்லை.ஹிந்தி தெரிந்த ஒரு ஆசிரியரிடம் மட்டுமே பழகும்.ஆனால் இரண்டாம் பருவத்தில் மெதுவாகத் தமிழ் பரிட்சயம் ஆன நிலையில் பிற பிள்ளைகளுடன் பழக ஆரம்பித்தது.

அதே பள்ளியில் கன்னடம் பேசும் குழந்தைகள் வரும் போதும் சில காலம் இதே நிலை ஏற்படுகிறது.

முதல் ஆறு ஆண்டுகளை age of language development என்கிறார் மாண்டிசொரி.

சூழலில் இருக்கும் ஒவ்வொரு சப்தமும் மொழிக்கூறும் [unit of language] குழந்தையின் மூளையில் record ஆகி வருவதை உணர்தல் வேண்டும்.

Dr.Madeswaran.M